# பொது அறிவுச் சரம்



## தொகுதி-4

- புன்னியாமீன் -

# பொது அறிவுச் சரம்

## தொகுதி - 4

- புன்னியாமீன் -

வரையறுக்கப்பட்ட 'சிந்தனை வட்டம்'
வெளியீட்டாளர்கள் (தனியார்) கம்பனி
இல 14 உடத்தலவின்னை மடிகே,
உடத்தலவின்னை 20802, ஸ்ரீலங்கா
தொலைபேசி 081- 2493746
தொலைநகல் 081- 2497246

'சிந்தனை வட்டத்தின் ௨௨௯வது வெளியீடு'

பொது அறிவுச் சரம் (தொகுதி - 4)

ஆசிரியர் : பி.எம். புன்னியாமீன்
பதிப்பு : 1ம் பதிப்பு - ஒக்டோபர் 2006
வெளியீடு : *சிந்தனை வட்டம்.*
14 உடத்தலவின்னை மடிகே, உடத்தலவின்னை,
ஸ்ரீலங்கா.
அச்சுப்பதிப்பு : சிந்தனை வட்டம் அச்சீட்டுப் பிரிவு
14 உடத்தலவின்னை மடிகே, உடத்தலவின்னை,
ஸ்ரீலங்கா.
கணனிப்பதிப்பு: எஸ்.எம். ரமீஸ்தீன்
ISBN : 955-8913-53-7
பக்கங்கள் : 40
விலை : **50/-**

**Pothu Ariwuch Charam (Vol - 4)**

Subject : Collection of National and International General afiairs (Vol - 4)

Author : **P.M.Puniyameen**
Printers & Publishers : **Cinthanai Vattam**
CV Publishers (Pvt) Ltd, 14, Udatalawinna Madige,
Udatalawinna 20802, Sri Lanka.
Edition : 1st Edition October 2006
Language : Tamil
Type Setting : S.M.Rameezdeen
ISBN : 955-8913-53-7
Pages : 40
Price : 50/-

© P.M.Puniyameen 2006
All Rights Reserved. No part of this Documentation may be reproduced or utilised, stored in a retrieval system, or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise, without the prior written permission of the author.

# போட்டிப் பரீட்சைகளுக்குத் தோற்றுவோருக்கும், பொது அறிவை வளர்க்க விரும்புவோருக்குமான வழிகாட்டி நூல்

# இலட்சியமும் வழிமுறையும்

எமது முன்னோர்களில் பெரும்பாலோர் வாழ்க்கையில் பெரிய இலட்சியங்களைக் கொண்டிருக்கவில்லை. ஒருசிலரே இலட்சிய வாதிகளாக இருந்து அவ்விலட்சியங்களை அடைய முயற்சித்தார்கள்.

இன்று எம்மில் பெரும்பாலோர் உலக வாழ்க்கை தொடர்பாகப் பெரிய இலட்சியங்களைக் கொண்டிருக்கிறோம். கல்வித் தகைமை பெறுதல், தொழில் பெறுதல், செல்வம் தேடுதல், சமூக அந்தஸ்துப் பெறுதல், வாழ்க்கைத் துணை தேடுதல், குடும்பம் நடத்தல், பெயரும் புகழும் அடைதல் போன்ற சகல துறைகளிலும் பலவிதமான உயர்ந்த இலட்சியங்களை வளர்த்துக் கொள்கிறோம்.

ஆனால் இப்படியான இலட்சியங்களை அடைவதற்கு நாம் கடைப்பிடிக்கும் வழிமுறைகள் உயர்ந்தனவா அல்லது நேர்மையானவையா என்பதைப் பற்றி நாம் அதிக தூரம் அக்கறை காட்டுவதில்லை. இலட்சியமும் நோக்கமும் உயர்ந்தனவாக இருந்தால் போதும்; அவற்றை அடையும் வழி எப்படியிருந்தாலும் பரவாயில்லை என்ற மனப்பாங்கு எம்மில் பலரிடையேயும் வேரூன்றி வருகின்றது.

இதனால்தான் நேர்மையற்ற குறுக்கு வழிகளும், நம்பிக்கைத் துரோகங்களும், பொய்யான வாக்குறுதிகளும், போலியான ஆவணங்களும், ஏமாற்று வார்த்தைகளும் இலட்சியங்களை அடைவதற்கான எமது பிரதான ஆயுதங்களாக மாறியிருக்கின்றன. அடிப்படையில் நல்லவர்களாக இருப்பவர்கள்கூட இந்தப் பலவீனத்துக்கு இலகுவில் இரையாகி விடுகின்றார்கள். கடின உழைப்பை விரும்பாமை இதற்கொரு காரணமாகும்.

“போட்டிகள் மிக்க இவ்வுலகிலே இப்படியெல்லாம் நியாயம் பார்த்துக் கொண்டிருந்தால் முன்னேறுவது எப்படி? மற்றவர்களெல்லாம் அப்படிச் செய்து முன்னேறும்போது நாம் மட்டும் கையாலாகாதவர் போல் சும்மா இருப்பதா? நாம் எங்கள் ஆட்களை ஏமாற்றவில்லையே... அரசாங்கத்தையோ வெளிநாட்டவனையோ தானே ஏமாற்றுகிறோம்” என்றெல்லாம் பலவிதமான போலி நியாயங்களையும், வாதங்களையும் இப்படியான சந்தர்ப்பங்களில் நாம் முன்வைக்கிறோம். இவற்றின் மூலம் எம்மை நாம் திருப்திப்படுத்திக் கொள்ளலாமே ஒழிய எம் செயலை நியாயப்படுத்திவிட முடியாது.

நேர்மையற்ற, தவறான வழிமுறைகளின் மூலம் அடையப்படும் செல்வங்களும் சாதனைகளும் இறுதியில் எமது மனநிம்மதியைக் கெடுத்து எம்மை உள்ளூறச் சித்திரவதை செய்வனவாக மாறிவிடும் என்பதே உலக நீதி. எனினும் மனச்சான்றே இல்லாதவனாக மனிதனை மரத்துப் போகச் செய்துகொண்டிருக்கும் நவீன போக்குகள் இப்படி இறுதிக் கட்டத்திலாவது உண்மையை உணர்ந்துகொள்ளச் செய்யுமா என்பதும் ஐயத்துக்குரியதே! எமது வாழ்க்கை கசப்பும் அவலமும் நிறைந்ததாக மாறுவதற்கு இந்தப் போக்குத்தான் காரணமாக இருக்கின்றது.

இலட்சியங்கள் உயர்ந்தனவாக இருந்தால் மட்டும் போதாது. அவற்றுக்கான வழிமுறையும் உயர்வானதாக இருக்க வேண்டும் என்பதை நாம் உணராதவரை இந்நிலைமை சீராகப் போவதில்லை.

# புராதன இலங்கையின் வெளிநாட்டு உறவுகள்


**இலங்கையின் வெளிநாட்டு உறவுகளிற் செல்வாக்குச் செலுத்திய காரணிகளைக் கூறுக.**

**அ.** **இலங்கையின் அமைவிடம்.**
**மேல்நாடுகளுக்கும், கீழ்த்திசை நாடுகளுக்குமிடையிலான கடல்வர்த்தக மார்க்கத்தில் (இந்து சமுத்திரத்தின் கேந்திர நிலையத்தில்) இலங்கை அமைந்திருந்தமை.**

**ஆ.** **இயற்கைத் துறைமுகங்களும், ஒடத் துறைகளும் காணப்பட்டமை.**

**உ+ம்.** **இயற்கைத் துறைமுகங்கள் - திருகோணமலை, மாதோட்டம்.**
**ஒடத்துறைகள் - ஊர்காவற்றுறை, மன்னார்.**

**இ.** **நீரோட்டப் பாதையில் இலங்கை அமைந்திருந்தமையும், பருவப் பெயர்ச்சிக் காற்றின் செல்வாக்கும்.**



இந்து சமுத்திரத்திற்கூடாக வீசுகின்ற தென்மேற் பருவக் காற்று, வடகீழ்ப் பருவக்காற்று ஆகியனவும் இவற்றிற்குரிய நீரோட்டங்களும் ஆரம்ப காலத்தில் இலங்கையின் வெளிநாட்டு உறவுகளிலே செல்வாக்குச் செலுத்தியுள்ளமை.

1. கி.மு. 1ம் நூற்றாண்டில் கிபொலொஸ் கண்டுபிடித்த நீரோட்டம் அராபியக் கடலில் ஆரம்பித்து மேற்கு இந்தியக் கரையோரமாக வங்காள விரிகுடா வரை செல்கின்றது. இந் நீரோட்டப் பாதையில் இலங்கை அமைந்தருந்தமை.

2. பருவக் காற்று-பாய்மரக்கப்பல் போக்குவரத்திற்கு உதவியமை.

ஈ. இந்திய உப கண்டத்திற்கு அண்மையில் அமைந்திருந்தமை.

மேற்படி காரணிகள் இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகத்திற் செல்வாக்குச் செலுத்திய புவியியல் காரணிகளாகும்.

**இலங்கையின் நிலைய முக்கியத்துவம் காரணமாக இலங்கை கொண்டிருந்த வெளிநாட்டுத் தொடர்புகளை சுருக்கமாக விளக்குக.**

அ. இந்தியாவுடன் நெருக்கமான உறவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை.

1. விசேடமாக வட இந்தியவுடனான தொடர்புகளைக் குறிப்பிடலாம். மதம், கலாசாரம் போன்ற துறைகளி னூடாக இத் தொடர்புகள் வலுப்பெற்றன.

உ+ம். A. ஆரியக் குடியிருப்புக்கள் ஏற்பட்டமை.
B. பௌத்த மதம் கொண்டுவரப்பட்டமை.



2. தென் இந்தியத் தொடர்புகளை அவதானிக்கையில் அவைகள் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளாகவும், திருமண உறவுகளாகவும் இருப்பதைக் காண முடிகிறது.

உ+ம். பாண்டிய, சோழ படையெடுப்புக்கள்.

A. சூரதிஸ்ஸன் ஆட்சியின் போது சேனன், குத்திகன் படையெடுப்பு.

B. அசேலன் ஆட்சியின் போது எல்லாளன் படையெடுப்பு.

C. முதலாம் சேனன் ஆட்சியில் ஸ்ரீமாற ஸ்ரீவல்லபன் படையெடுப்பு. (கி.பி. 848ல்)

D. 5ம் மகிந்தன் ஆட்சியில் இராசராச சோழன் படையெடுப்பு. (கி.பி. 1017)

3. திருமண உறவுகள்.

A. விஜயன் மதுரை இளவரசியை கொணர்வித்தமை.

B. பண்டுவஸ்தேவன் பத்தகச்சனாவை கொணர்வித்தமை.

C. 4ம் மகிந்தன் கலிங்கதேச இளவரசியை கொணர்வித்தமை.

D. 1ம் விஜயபாகு கலிங்கதேச இராணியை கொணர்வித்தமை.

E. 1ம் விஜயபாகு சகோதரியின் பாண்டிய திருமணத் தொடர்புகள்.

ஆ. தூர நாடுகளுடன் தொடர்புகள் மேற்கொள்ளப் பட்டிருந்தன. இத் தொடர்புகள் மத, கலாசார வியாபார ரீதியல் அமைந்திருந்தன.

1. மத ரீதியான தொடர்புகள். (பௌத்த கலாச்சாரத் தொடர்புகள்) பர்மா, சீயம், ஜாவா, சுமாத்திரா, காம்பூச்சியா,

11. வர்த்தகத் தொடர்புகள்.
வர்த்தக நடவடிக்கை குறித்து தொடர்புகள் தொலைதூர நாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

60. புராதன யுகத்தில் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட ஏற்று, இறக்குமதி விய பாரம் பற்றிச் சுருக்கமாக விளக்குக.

அனுராதபுர, பொலனறுவை யுகங்களில் மேற்திசை நாடுகளுக்கும், கீழ்த்திசை நாடுகளுக்குமிடையில் நடைபெற்று வந்த சர்வதேச வர்த்தகத்தில் இலங்கை பங்கிட மாற்று நிலையமாக இருந்து வந்துள்ளது.

அ. இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள்.

* குதிரை, நறுமணப்பொருட்கள். (இந்தியாவிலிருந்து)
* பட்டுத்துணி, கண்ணாடிப் பொருட்கள், கற்பூரம் , விசிறிகள் (சினாவிலிருந்து)

ஆ. ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்கள். யானைகள், யானைத்தந்தம், மாணிக்கக் கற்கள், வாசனைத்திரவியங்கள் , முத்துக்கள்.

நாகரிகம் தென்மேற்குத் திசையை நோக்கி இடம்பெயந்தமையும் இராட்சியங்கள் இடம் மாறியமையும்.



சுமார் 1500 ஆண்டுகாலமாக எழுச்சி பெற்றிருந்த ராசரட்டை இராச்சியம் 13ம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியில் முடியுரிமை பற்றிய பாரிய பிணக்குகளை எதிர்நோக்கியது. கி.பி. 1196ல் நிஸ்ஸங்கமல்ல மன்னனின் மறைவை அடுத்து வந்த 18 வருடங்களிலும் இந்தபிணக்குகளை விசேடமாக அவதானிக்கலாம். இந்தப் பிணக்குகளுக்கான அடிப்படையாக முடியுரிமை கலிங்க வம்சத்தினருக்கா அல்லது பாண்டிய வம்சத்தினருக்கா என்பதாகவே அமைந்திருந்தது.

இந்தப் 18 ஆண்டுகளில் 12 மன்னர்கள் இராசரட்டை இராச்சியத்தை ஆட்சி புரிந்ததாக வரலாறு கூறுகின்றது. இராசதானியில் தொடர்ந்து இடம்பெற்று வந்த குழப்பங்களும் போர்களும் வெளிநாட்டு ஆக்கிரமிப்பாளருக்கு உகந்த ஒரு சந்தர்ப்பமாக இருந்தது. இந் நிலையில் கி.பி. 1215 ல் கலிங்க குலத்தைச் சேர்ந்த மாகன் என்பவன் 24000 சேரப் போர்வீரர்கள் அடங்கிய படையுடன் வந்து பொலநறுவை இராட்சியத்தைக் கைப்பற்றிக்கொண்டான். இது இராசரட்டை நாகரிகத்துக்குக் கொடுக்கப்பட்ட இறுதி அடியாகும்.

பொலநறுவை இராட்சியத்தை அடுத்து அமைக்கப்பட்ட இராட்சியம் எம் மன்னனால், எங்கு எப்போது அமைக்கப்பட்டது?.

3வது விஜயபாகு மன்னனால், தம்பதெனியாவில், 1232 இல்

இராசரட்டை இராச்சியம் தென்மேற்குத் திசை நோக்கி இடம்பெயர்ந்தமைக்கான காரணங்கள் யாவை?

1. மாகனின் கொடூரமான அடக்கு முறைகள். குறிப்பாக அரச உரிமை உடையவர்களாக இருந்த குலக் குடும்பங்களின் தலைவர்களுக்கும், பிக்குகளுக்கும் பல அட்டுலியங்கள் செய்தான். எனவே இவர்கள் றுகுனு, மலய ரட்டைக்குச் சென்றனர்.

2. நீர்ப்பாசனம் புனரமைக்கப்படாமை. இது ராசரட்டை நாகரிகத்தின் அத்திவாரத்தைத் தகர்த்தது.

3. காடுகள் தோன்றியமையும், மலேரியா நோய் பரவியமையும். நீர்ப்பாசனம் புனரமைக்கப் படாமையினால் வயல் வெளிகளும் சிறு குளங்களை அண்டிய பகுதிகளும் வெகு விரைவில் உருமாறி அடர்ந்த காடுகளாயின. மலேரியா போன்ற தொற்று நோய்கள் பரவின. இதனால் இராசரட்டை சமவெளி மனிதன் வசிப்பதற்கு ஒவ்வாத பகுதியாக மாறியது. எனவே மக்கள் மலய ரட்டையையும் தென்மேற்குப் பகுதியையும் நோக்கி இடம் பெயர்ந்தனர்.

மாகனின் ஆட்சிக்காலத்தில் அவனுக்கெதிராகத் திரட்டப்பட்ட படைகளின் தலைவர்கள் யார் ?

தம்பதெனிய- விஜயபாகு/ யாப்பகுவ - சேனாதிபதி சுபன்/ மினிப்பே - சேனாதிபதி சங்க / ஊவா - புவனேகபாகு.

தம்பதெனிய இராச்சியத்தை (1232) அமைத்த 3ம் விஜயபாகு பற்றி சுருக்கமாக எழுதுக.

அ) பெலிகலை மலை ( கேகாலை மாவட்டம்) உச்சியில் தந்ததாது மாளிகை ஒன்றைக் காட்டுவித்தான்.
ஆ) பிக்குகளை வரவழைத்து கௌரவித்தவன்.
இ) விஜயசுந்தராராமய எனும் விகாரையை (தம்பதெனியாவில்) கட்டுவித்தான்.

இரண்டாம் பாராக்கிரபாகு (கி.பி.1236-1270) வின் சாதனைகளைக் குறிப்பிடுக.



அ) அந்நிய ஆக்கிரமிப்புப் படையெடுப்புக்களை வெற்றிகொண்டவன். 1255ல் மாகனைத் தோற்கடித்தான். (இதற்காகவேண்டி பாண்டியப் பேரரசனின் உதவியைப்பெற்றுக்கொண்டான்).

ஆ) 1247 இலும் 1261 இலும் சந்திரபானு எனும் யாவா மன்னனின் படையெடுப்பினை வெற்றி கொண்டான்.

இ) பிக்குகளின் ஒழுக்க விதிக் கோவையை உருவாக்கினான். அவர்களின் கல்வி, ஒழுக்க விவகாரங்களை மேம்படுத்துவதற்குப் பெரும்பாடுபட்டான்.

ஈ) இவன் ஒரு சிறந்த பண்டிதன். இவனால் எழுதப்பட்ட நூல்கள் விசுத்தி மார்க்க சன்னய, கவிசிலுமின என்பனவாகும். இவன் கலிகால சாகித்ய சர்வஞ்ஞபண்டித எனும் பட்டம் பெற்றவன்.

தம்பதெனிய இராச்சியத்தை அடுத்து தோற்றம் பெற்ற இராச்சியங்களையும், அவற்றைத் தலைநகராக்கிய மன்னர்களையும் - ஆட்சிக் காலத்தையும் குறிப்பிடுக.

| | | | |
|---|---|---|---|
| 1. | தம்பதெனிய இராச்சியம். (கி.பி 1232-1272) | - | 3ம் விஜயபாகு. (கி.பி 1232- 1236) |
| 2. | யாப்பகுவ இராச்சியம். (கி.பி. 1272-1293) | - | 1ம் புவனேகபாகு. (கி.பி. 1272-1284) |
| 3. | குருநாகலை இராச்சியம். (கி.பி. 1293-1326) | - | 2ம் புவனேகபாகு. (கி.பி. 1293-1302) |
| 4. | கம்பளை இராச்சியம். (கி.பி. 1341-1412) | - | 4ம் புவனேகபாகு. (கி.பி. 1341-1351) |
| 5. | கோட்டே இராச்சியம். (கி.பி. 1412-1508) | - | 6ம் பராக்கிரமபாகு. (கி.பி. 1412-1467) |

கம்பளை ஏன் தலைநகராக்கப்பட்டது ?

1. குருநாகல் இராச்சியத்தில் ஏற்பட்ட குழப்பம். பொது மக்கள், பிக்குகள் மலைநாடு நோக்கிச் சென்றமை.
2. கம்பளை மலைகளால் சூழப்பட்ட இடத்தில் அமைந்திருந்தமை.
3. மலயதேசத்து மத்தியபகுதி பாதுகாப்புடையதாக விளங்கியமை.
4. கம்பளையைச் சுற்றி மகாவலி ஓடுகின்றமை.
5. சிவனொளிபாத மலைக்குச் செல்லும் பாதையில் மையமாக விளங்கியமை.

6ம் பராக்கிரமபாகுவின் சாதனைகளைக் குறிப்பிடுக.

அ) தம்பதெனிய 2ம் பராக்கிரமபாகுவின் பின்னர் முதல் முறையாக நாட்டை ஒன்றுபடுத்தியவன்.

யாழ்ப்பாணத்திற்கு சபுல்மல் குமாரனை அனுப்பி ஆரியச் சக்கரவர்த்தியை தோல்வியுறச் செய்தவன். மலையரட்டை கலகத்தை அடக்கியவன். உருகுனு, வன்னி உட்பட 18 பிரதேசங்களை (உலர் வலயத்தில்) ஐக்கியப்படுத்தியவன்.

ஆ) இலங்கையின் வரலாற்றிலே இம் மன்னனுடைய ஆட்சிக்காலமே (கி.பி. 1412 - 1467) இறுதியாகச் சீரும், சிறப்பும் பெற்றுவிளங்கிய காலமாகக் கருதப்படுகிறது. முழு இலங்கையையும் இறுதியாக ஆண்ட பெருமை இம்மன்னனையே சாரும்.

இ. இலக்கிய மறுமலர்ச்சியை ஏற்படுத்தியவன்.

1. இலக்கிய மறுமலர்ச்சிக்கு வழிவகுத்த கல்வி பீடங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டன.



உ+ம் ஸ்ரீ சனாநந்த பிரிவெனா (வீதாகம)
பத்மாவதி பிரிவெனா (குருநாகலை)
விஜயபாகு பிரிவெனா (தொட்டகமுவ)
இறுகல் குலதிலக பிரவெனா (தெவிநுவர)
கனேந்திரா தேவி பிரிவெனா (பப்லியானை).
இக்கல்வி பீடங்களில் தொட்டகமுவ ஸ்ரீ றாகுல தேரர், வீதாகம மைத்திரிய தேரர், க்றகல வனரத்ன தேரர் முதலிய அறிஞர்கள் சேவையில் ஈடுபட்டனர்.

இவனுடைய காலத்தில் எழுதப்பட்ட முக்கிய இலக்கியப் படைப்புக்கள்.

காவிய நூல்கள் - பறவி சந்தேசய, சலலிஹினி சந்தேசய, கோகில சந்தேசய, கிறா சந்தேசய, ஹங்ச சந்தேசய, குத்திலய, லோவட சங்கராவ, பரகும்பா சிரித.

உரைநடை நூல் - சத்தர்மரத்னாகறய. (இலங்கையின் இலக்கிய வரலாற்றின் பொற்காலம் என இக்காலம் வர்ணிக்கப்படுகிறது).

## அரசியல் தாபனங்களும், சமூகத் தாபனங்களும்.

பௌத்த மதம் பரவ முன்னர் இலங்கையில் காணப்பட்ட சமூக முறையின் பிரிவுகள் யாவை ?

சத்திரியர், பிராமணர், வைசிகர், சண்டாளர்.

பௌத்த மதம் காரணமாகப் புராதன இலங்கையில் உண்டான முக்கிய சமூகப் படிகளைக் கூறுக.

அ) உபாசக (பக்தியுடையவன்)
ஆ) உபாசிகா (பக்தியடையவள்)

இ) பிக்குகள் (துறவறம் பூண்டவர்)
ஈ) பிக்குணிகள் (துறவறம் பூண்டவள்)

பொலனறுவை யுகத்தில் இலங்கையில் காணப்பட்ட சாதிப்பிரிவுகள் எவை?

பொலனறுவை யுகத்தில் தென் இந்தியாவுடன் இருந்த நெருக்கமான உறவு காரணமாக இந்து மக்கள் மத்தியில் நிலவிய சாதி முறை இங்கும் செல்வாக்குச் செலுத்தியது.

1. முதற்படி
மகாகுலத்தவர் - அரசனும் அவன் குடும்பத்தினரும்.
- அமைச்சர்கள், பிராமணர்.
2. இரண்டாம் படி - விவசாயம் போன்ற தொழில்களில் ஈடுபட்டோர்.
3. முன்றாம் படி - சண்டாளர் (தரக் குறைவான வேலைகளில் ஈடுபட்டோர்).

இலங்கைச் சமூக அமைப்பில் பெண்களின் அந்தஸ்தைப் பற்றிக் குறிப்பிடுக.

1. பெண்களுக்குச் சம அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் என பௌத்தம் போதிக்கிறது.

2. பெண்களுக்குச் சுதந்திரம் இருந்தமை - தனியே பிரயாணம் செய்ய, மத அனுட்டானங்களில் ஈடுபட, கணவனைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள (பெற்றோர் அனுமதியுடன்.)

3. பெண்கள் வீர சரித்திர நாயகிகளாகப் போற்றப்பட்டுள்ளனர்.

உ+ம். விகாரமகாதேவி, சோமாவதி.



4. பெண்கள் ஆண்களுடன் சம மட்டத்தில் இருந்துள்ளமை. உ+ம். சிம்மாசனத்தில் வீற்றிருந்த சீவலி, அனுலா, கல்யாணி, லீலாவதி போன்றார்.

கிராமத்தின் தன்னிறைவுத் தன்மை பற்றிக் குறிப்பிடுக.

1. தமக்குத் தேவையான உணவைத் தாமே உற்பத்தி செய்தமை.

2. ஆயுதங்கள் கிராமத்துக் கம்மாளர்களினாலேயே வழங்கப்பட்டமை.

உ+ம் கத்தி, கோடாரி, மண்வெட்டி, கலப்பை.

3. குயவர்கள் சட்டி, பானை போன்றவற்றை வழங்கியமை.

வர்த்தக வகுப்பின் தலைவன் எவ்வாறு அழைக்கப்பட்டான் ?

“செட்டி”

## அரசியல் அமைப்பு

அனுராதபுர ஆரம்ப காலத்தில் அரசர்களின் கடமைகளும், பொறுப்புகளும் யாவை?

1. நாட்டு மக்களுக்குப் பாதுகாப்பு அளித்தல்.
2. சமுதாயத்தில் அமைதியையும், ஒற்றுமையையும் ஏற்படுத்துதல்.
3. நீர்ப்பாசனத் திட்டங்களை ஒழுங்கு செய்து வழங்கல்.

4. ஆத்மீக வாழ்க்கைக்கு வேண்டிய சமய, கலாசார கருமங்களை விருத்தி செய்தல்.

ஆட்சி உரிமையில் மாப்பா, எப்பா பதவிகள் பற்றிச் சுருக்கமாகக் கூறுக.

1. ஆட்சி உரிமையானது சகோதரனிடமிருந்து சகோதரனுக்கே வழங்கப்பட்டது.
2. அரசனுடைய அடுத்த சகோதரனுக்கு வழங்கப்பட்ட பதவியே மாப்பா எனப்பட்டது.
3. அரசன் இறந்தால் மாப்பா சிம்மாசனம் ஏறுவான்.
4. இளைய சகோதரர்கள் றுகுணு, மலயரட்டைக்கு ஏப்பாக்களாக நியமிக்கப்படுவர்.
5. மாப்பா, சிம்மாசனம் ஏறியபின் றுகுனுரட்டை ஏப்பா மப்பா பதவிக்கு நியமிக்கப்படுவான்.

அனுராதபுர காலத்தில் அரசனுக்கு விசுவாசமுள்ள இருவருக்கு வழங்கப்பட்ட முக்கியமான பதவிகள் யாவை?

**யத்தக்காஹக.**
**அசிக்காஹக.**

அனுராதபுர காலத்தில் காணப்பட்ட பிரதேச ஆட்சிப் பிரிவுகள் யாவை?

1. உத்தரபஸ்ஸ. (வடதிசை)
2. பிரான்ஸின் பஸ்ஸ (கிழக்குத் திசை)
3. தக்கின பஸ்ஸ. (தெற்குத் திசை)
4. பஸ்ஸிமபஸ்ஸ. (மேற்குத் திசை)

(பஸ்ஸ எனும் சொல் தேசம் எனப் பொருள்படும்)



# பொது அறிவுத் துளிகள்

01. Civil Law/Civil Service/Civil List என்பதில் பிரித்தானிய அரச குடும்பத்துடன் தொடர்புடையது?
*- Civil List*

02. ஸ்டாலின், ரூஸ்வெல்ட் மற்றும் சர்ச்சில் கலந்து கொண்ட இரண்டாம் உலகப் போரின் முதல் உள் - கூட்டு (Interallied) மகாநாடு?
*- டெஹ்ரான்*

03. 'திலி' எதன் தலைநகர்?
*- கிழக்கு டீமோர்*

04. ஹித்ரோ விமான நிலையம் எங்குள்ளது?
*- இலண்டன்*

05. நியூயோர்க் மாகாணத்தின் தலைநகர்?
*- அல்பானி*

06. நயாகரா அருவி எந்த நாட்டின் எல்லையில் உள்ளது?
*- அமெரிக்கா / கனடா*

07. செவ்வாயிலிறங்கிய முதல் செயற்கை துணைக்கோள்?
*- மார்ஸ் 3 (U.S.S.R. 1966)*

08. முதலாவதாக வெள்ளியிலிறங்கிய செயற்கை துணைக்கோள்?
*- வீனாஸ் 3 (U.S.S.R. 1966)*

09. அமெரிக்கா அனுப்பிய முதல் துணைகோள்?
*- எக்ஸ்ப்ளோற்றர் 1 (1958)*

10. வயதான விண்வெளி யாத்திரிகர்?
*- கேனல் லேவ்டெமின் (ஸோயூஸ் - 15)*

11. மேற்கத்திய ஜோதிடம் இந்தியப் பாடப் புத்தகத்தில் புகுத்தப்பட்ட ஆண்டு?
*- 1817*

12. பம்பாயிலும், திருவனந்தபுரத்திலும் காந்த மண்டல சோதனை தொடங்கிய வருடம்?
*- 1841*

13. விண்வெளி ஆராய்ச்சி செயல்படுத்திய ஆண்டு?
*- 1875*

14. டாட்டா நிறுவனம் (இன்ஸ்டிட்யூட் ஆப் மண்டமென்டல் றிஸார்ச்) எப்போது எங்கு நிறுவப்பட்டது?
*- 1958 ல் பம்பாயில் நிறுவப்பட்டது.*

15. இந்தியா முதல் அனுப்பிய பூமியைக் கூர்ந்து நோக்கும் துணை கோள்?

*- ஆரியப்பட்டா*

16. இந்தியா அனுப்பிய இரண்டாவது செய்தி மாற்றத் துணைக்கோள் 'பாஸ்கராவை' அனுப்பிய ஆண்டு?

*- 1979*

17. 'கிராண்ட கன்யாவில்' காணப்படும் கால்தடங்கள் எந்த விலங்கி னுடையவை?

*- டைனோஸர் (எனக் கருதப்படுகின்றது)*

18. அலெக்ஸாண்ட்ரியாவின் பாரோஸ் என்பது என்ன?

*- அலெக்ஸாண்ட்ரியா துறைமுகத்தின் கலங்கரை விளக்கம்*

19. உருளைக்கிழங்கு முதன் முதலாக எந்த நாட்டில் யாரால் விவ. சாயம் செய்யப்பட்டது?

*- அமெரிக்காவில், சிவப்பு இந்தியர்களால்*

20. இன்கா இனத்தவரின் சூரியக் கடவுளின் பெயர் என்ன?

*- இண்டி*

21. 'ஸ்டோன் கெஞ்ச்' எனப்படும் இராட்சதக் கல்தூண் வளையங் களை (இங்கிலாந்து) முதன் முதலில் ஆராய்ந்தவர் யார்?

*- ஜான் ஆப்ரே (கி.பி 1626)*

22. உலகின் முதல் நகரம் என அகழ்வாராய்ச்சியாளர்களால் கருதப் படும் இடம் எது?

*- துருக்கி*

23. உலகின் மிகப்பழமையான துறைமுகம் எங்கு உள்ளது?

*- லோத்தல்*

24. செயற்கை துணைக்கோளின் உதவியுடன் கண்டுபிடிக்கப்பட்ட மறைந்த புராண நதி எது?

*- சரஸ்வதி நதி (கி.மு. 2000ல் மறைந்ததாகக் கருதப்படுகின்றது)*

25. எழுதுதல் முதன் முதலாக எந்த நாகரிகத்தில் பயன்படுத்தப்பட்ட தாகக் கருதப்படுகின்றது?

*- சுமேரியர் நாகரிகத்தில்*

26. இரப்பர், சுயிங்கம் ஆகியவை யாரால் கண்டுபிடிக்கப்பட்டன?

*- அமெரிக்காவின் பூர்வீகக்குடிகள்*

27. நாஜிகள் தங்கள் அணிவகுப்புகளுக்குப் பயன்படுத்திய இசை எந்த இசை மேதையுடையது?

*- வாக்னர்*



28. தண்ணீரின் அடர்த்தி குறைவது எப்போது?

*- அது உறையும் போது*

29. ஒளியை மிஞ்சிச் செல்லும் குணம் படைத்ததாக ஊகிக்கப்படும் இன்னமும் கண்டுபிடிக்கப்படாத நுண் அணுத்துகள்களின் பெயர் என்ன?

*- டேக்கியோன் (Tachyons)*

30. ஒருங்கிணைந்த புவியீர்ப்பு விசைக்கோட்பாடு (Unified gravitational field theory) எனும் கோட்பாட்டை உருவாக்கிய இயற்பியலா ளர்கள் யார்?

*- சார். பிரேட் கோயில், ஜெயந்த விஷ்ணு நர்லிக்கர்*

31. யூரியா உரத்தில் அடங்கி இருக்கும் மூலகம் எது?

*- நைதரசன்*

32. இணையத்தளம் ரீதியாக மிக அதிக அளவில் மின் வர்த்தகம் நடத்தும் நிறுவனம் எது?

*- அமேசான் டாட் காம்.*

33. உலகில் மிகப் பெரிய செய்தி நிறுவனம் எது?

*- ராய்ட்டர்*

34. நதியே இல்லாத நாடு எது?

*- சவூதி அராபியா*

35. வைரம் அதிகமாக வெட்டியெடுக்கப்படும் நாடு எது?

*- தென் ஆபிரிக்கா*

36. மிக உயரமான நாடு எது?

*- திபெத்*

37. பெரிய அரண்மனையுள்ள இடம் எது?

*- வத்திக்கான் (மாளிகை)*

38. டைனோமீட்டர் என்றால் என்ன?

*- சக்தியை (Force) அளக்கும் கருவி*

39. 'வெள்ளை பிளேக்' என்றால் என்ன?

*- நுரையீரல் டி.பி.*

40. அமெரிக்க அரசின் பாதுகாப்புத் தளமான பெண்டகனால் நாடு தளுவிய 'நெட்வொர்க்காக' இணைய தளம் முதலில் உருவாக்கப் பட்டது. அப்போது அதன் பெயர் என்ன?

*- ARPANET*

41. நம் உடலின் ஆற்றலை பல பாகங்களுக்கும் கொண்டுச் செல்லும் 'பொஸ்பரஸ்' கலந்த மூலகம் எது?

*- அடினோஸின் டிரை பாஸ்பேட் (ATP)*

42. முதன் முதலாக இருதய மாற்று அறுவை சிகிச்சையைச் செய்த மருத்துவ மேதை யார்?

*- டாக்டர் கிறிஸ்டியன் பேர்னார்ட்*

43. டைனமைட் எனும் வெடிப்பொருளில் பயன்படுத்தப்படும் முக்கிய இரசாயனப் பொருள் எது?

*- நைட்ரோ கிளிசரின்*

44. நாம் அன்றாடம் பயன்படுத்தும் உப்பின் பெயர் எது?

*- சோடியம் க்ளோரைட்*

45. இலையுதிர் காலங்களில் இலைகள் மஞ்சளாக மாறுவது எந்த பொருளால் நிகழ்கிறது?

*- ஸாந்தோபைல் (Xanthophyll)*

46. அமெரிக்க அரசின் உதவியுடன் உருவாக்கப்பட்ட வெளிக்கிர கங்களில் அறிவுள்ள உயிர்களைத் தேடும் அமைப்பின் பெயர் என்ன?

*- SETI - Search for Extra Terrestrial Intelligence'*

47. நமது இரத்தத்தின் சிவப்பு நிறத்துக்குக் காரணமான மூலகத்தின் பெயர் என்ன?

*- ஈமோகுளோபின்*

48. தசம எண் முறையைக் கண்டுபிடித்தவர் யார்?

*- இந்தியர்கள்*

49. பற்களே இல்லாத பாலூட்டி மிருகம் எது?

*- எறும்பு தின்னி*

50. ஆறுகளின் நடுவே மரத்துண்டுகள் மூலம் அணை போன்ற அமைப் பை உருவாக்கும் விலங்குகளின் பெயர் என்ன?

*- பீவர்கள்*

51. இன்றைய அணு உலைகளின் அடிப்படையான கட்டுப்படுத்தப்பட்ட அணுச் சிதைவைக் கண்டுபிடித்தவர் யார்?

*- என்ரிக்கோ பெர்மி*

52. சர். வில்லியம் கெர்சல் கண்டுபிடித்த கிரகம் எது?

*- யூரேனஸ்*

53. உயிர்களில் இருக்கும் அடிப்படை அமினோ அமிலங்களைப் பரிசோதனைச்சாலைகளில் பழங்கால உலகின் சூழலை உரு வாக்கியதன் மூலம், தோற்றுவித்த அறிவியல் அறிஞர்கள் யார்

*- யூரே, முல்லர்*

54. உயிர்கள் முதன் முதலில் சில எளிய மூலகங்களிலிருந்து தொல் பழம் உலகில் உருவாகி இருக்கலாம் எனக் கூறிய அறிவியலா ளர் யார்?

*- அலெக்ஸாண்டர் ஒப்பாரின்*



55. 'கனவுகள் ஆழ் மனதின் வெளிப்பாடுகள்' எனக் கண்டுபிடித்த மருத்துவ உளவியலாளர் யார்?

*- சிக்மண்ட் பிரைட்*

56. நவீன பொருளாதாரத்தின் தந்தை என அறியப்படுபவர் யார்?

*- அடம்ஸ்மித்*

57. உயிரியல் துறையில் நோபல் பரிசு பெற்ற இந்தியர் யார்?

*- ஹர் கோவிந்த் குரானா*

58. LASER எனும் சொற்களின் விரிவாக்கம் என்ன?

*- Light Amplilication by Stimulated Emission of Radition*

59. 'புத்தர் புன்னகைத்தார்' எனும் சொற்களின் முக்கியத்துவம் என்ன?

*- 1972 இல் இந்தியா நடத்திய அணுகுண்டு பரிசோதனை வெற்றி அடைந்ததைக் குறிக்கும் சங்கேதத் தொடர்*

60. புகழ் பெற்ற கணினி மென் பொருளான டொஸ் (DOS) எந்த நிறுவனத்தினுடையது?

*- மைக்ரோ ஸொப்ட்*

61. உலகின் முதல் செயற்கை துணைக்கோள் எது?

*- ஸ்புட்னிக்*

62. உலகின் முதன் முதலில் விண்வெளிப் பயணம் செய்த மனிதன் யார்?

*- யூரிககாரின்*

63. உலகின் முதன் முதலாக விண்வெளிப் பயணம் செய்த பெண் மணி யார்?

*- வாலண்டினா தெரஸ்ஷோவா*

64. முட்டையிட்டு குஞ்சுபொரித்து குஞ்சுகளுக்கும் பாலூட்டும் விலங்கு எது?

*- தாரா அலகு பிளாற்றிபெஸ்*

65. 'பேயர்' எனும் மருந்து தயாரிப்பு நிறுவனம் எந்த நாட்டைச் சேர்ந்தது?

*- ஜெர்மனி*

66. கெஸட்டீர் (Gazeteer) என்றால் என்ன?

*- பல்வேறு இடங்களின் குறிப்புப் பட்டியல்*

67. கலிலியோ இறந்த வருடத்தில் கிருஸ்துமஸ் நாளில் பிறந்த விஞ்ஞானி யார்?

*- சார் ஐஸாக் நியூட்டன்*

68. உலக மக்களில் பாதிக்கும் மேற்பட்டோரின் அடிப்படை உணவு எது?

*- அரிசி*

69. உலகில் மிக அதிகம் பேர் பணியாற்றும் துறை எது?
*- கல்வித் துறை*

70. சமய வளர்ச்சிக்காக ஒரு மில்லியன் டாலர் பரிசு வழங்கப்படுவது எந்த பரிசிற்கு?
*- டெம்ப்லெட்டன் பரிசு*

71. பிகாசோ தனது ஓவியங்களில் 1901 - 1904 வரை பயன்படுத்திய ஒரே வண்ணம் எது?
*- நீலம்*

72. Pedagogy - எதைப் பற்றிய படிப்பு?
*- கற்பிக்குமுறை*

73. Serigraphy எதைப் பற்றியது?
*- ஸ்கிரீன் பிரிண்டிங்*

74. Hollerith Machine Company எவ்வாறு வழங்கப்படுகிறது?
*- IBM*

75. உலகின் மிகப் பெரிய எண்ணெய் நிறுவனம்
*- Exxon Mabil*

76. Actuarial Science எதனுடன் தொடர்புடையது?
*- காப்புறுதி*

77. வங்கிப் பணியில் PIN என்பது என்ன?
*- Personal Identification Number*

78. விமானத்தின் 'கறுப்புப் பெட்டி' என்பது என்ன?
*- விமானப் பதிவுக் கருவி*

79. உலகில் மிகப்பரந்த வெப்பப் பாலைவனம் எது?
*- சகாரா பாலைவனம்*

80. உலகில் மோட்டார் வாகனத் தொழிற்சாலைகளின் பணிமனை என்று பிரபலமாக அழைக்கப்படுமிடம்?
*- டெட்ராய்ட்*

81. 'எவரெஸ்ட்' சிகரத்தின் நேபாளிப் பெயர் என்ன?
*- சாகர்மாதா*

82. 'எவரெஸ்ட்' சிகரத்தை முதலில் அடைந்தவர்கள் யார்?
*- எட்மண்ட் ஹில்லாரி, டென்ஸிங்நார்கே*

83. இலண்டனில் புகழ் பெற்ற புனித பவுல்கதீட்ரலை உருவாக்கியவர் யார்?
*- சார் கிறிஸ்டோபல் லெரன்*

84. புனித பவுல்கதீட்ரல் கட்டி முடிக்க எத்தனை காலம் பிடித்தது?
*- 35 வருடங்கள்*



85. அமெரிக்காவின் சுதந்திர தேவிச் சிலையின் முழுப் பெயர் என்ன?
*- உலகிற்கு ஒளி தரும் சுதந்திரம் (Liberty Enlightening the world)*

86. சுதந்திரதேவி சிலையை உருவாக்கியவர் யார்?
*- பிரான்ஸ் கலைஞன் பிரெடரிக் ஆகஸ்டே பர்தோல்டி(1884)*

87. சீனப் பெரும் சுவரை உருவாக்க ஆணையிட்ட மன்னன் யார்?
*- ஸீ ஹுவாங்டி*

88. சீனப் பெரும் சுவரின் நீளம் என்ன?
*- 4000 மைல்கள்*

89. உலக அதிசயங்களில் ஒன்றான தொங்கு தோட்டங்கள் எந்த நகரத்தில் உருவாக்கப்பட்டன?
*- பாபிலோன்*

90. அங்கோர் வாட் கோவிலை உருவாக்கிய மன்னன் யார்?
*- சூரிய வர்மன் II*

91. அங்கோர் வாட்டின் ஐந்து கோபுரங்கள் எதனைக் குறிக்கின்றன?
*- புராதன மேருவின் ஐந்து சிகரங்களை*

92. பியூஜி மலை எங்கு உள்ளது?
*- ஜப்பான்*

93. பொம்போயீ நகரம் எவ்வாறு அழிந்தது?
*- விசுவியஸ் எரிமலையால்*

94. அமெரிக்காவின் சுதந்திர தேவிச் சிலையின் தலைக் கிரீடத்தின் ஏழு கதிர்கள் எதைக் குறிக்கின்றன?
*- ஏழு கண்டங்கள், எழு சமுத்திரங்கள்*

95. 'கிராண்ட் கன்யான்' எங்கு உள்ளது?
*- அமெரிக்காவில் கொலராடோ மாநிலத்தில்*

96. 'கிராண்ட் கன்யான்' எதனால் உருவானது?
*- பூமியுடன் ஒளி நட்சத்திரக்கல் மோதியதால்*

97. 'இறப்பரை' இனங்கண்டு உலகுக்கு அறிமுகம் செய்தவர்?
*- கொலம்பஸ்*

98. 'இறப்பர்' என்று பெயரிட்டவர்?
*- ஜோசப் பிரட்லி*

99. BMW என்பது என்ன?
*- ஜெர்மனியில் சொகுசுக்கார் தயாரிப்பாளர்கள்*

100. FIAT என்பதன் (கார்) விரிவாக்கப் பெயர்?
*- Fabbrila Italiana Automobil Torino*

101. 'ப்ளூ சிப்ஸ்' என்பது...?
*- பங்குச் சந்தையில் மிக மிக மதிப்புள்ள பங்குகள்*



# 'ஹெறி பொட்டர்' நாவலும், திரைப்படமும்

அண்மைக்காலத்தில் உலகளாவிய ரீதியில் சிறுவர் முதல் பெரியோர் வரை அனைவரையும் பரவசப்படுத்திய 'நாவல்' தொடரே 'ஹெறிபொட்டர்' என்பதாகும்.

1997ம் ஆண்டு ஹறி பொட்டர் நாவலின் முதல் பாகத்தை ஜே.கே. ரோவ்லிங் என்ற பெண் எழுத்தாளர் வெளியிட நாவல் விற்பனையில் சாதனை படைத்தது. முதலாவதாக வெளிவந்த ஹறிபொட்டர் நாவலின் முழுப் பெயர் Harry Potter and the Philosopher's என்பதாகும். இந்நூலானது 63 மொழிகளில் இதுவரை 300 மில்லியன் பிரதிகளுக்கு மேல் விற்பனையாகியுள்ளது எனக் கூறப்படுகின்றது. தொடர்ந்து ஆறு பாகங்கள் நாவலாக வெளிவந்தன. ஏழாவது பாகத்துடன் இத்தொடரை நிறைவு செய்யவுள்ளதாக 'ரோவ்லிங்' கூறியுள்ளார்.

இத்தொடரில் ''ஓடர் ஒ.ஃப் த .ஃபீனிக்ஸ்'' என்ற நூலானது வெளியிடப்பட்டு 24 மணித்தியாலங்களுக்குள் 5 மில்லியன் பிரதிகள் விற்றுத் தீர்ந்தமையும் ஓர் உலகச் சாதனையாகவே கருதப்படுகின்றது. 'ஹெறி பொட்டர்' நாவலின் முதல் ஐந்து பாகங்களும் திரைப்படமாக வெளிவந்தன. சிறியோரை மட்டுமல்லாது பெரியோரையும் கவர்ந்த ஹறி பொட்டர் திரைப்படம் வசூலிலும் சாதனை படைக்க தவறவில்லை. இதுவரை வெளிவந்த நான்கு பாகங்களும் உலகெங்கிலும் சுமார் 3.5 பில்லியன் அமெரிக்க டொலர்களை ஈட்டியுள்ளன.

ஐந்தாவது பாகமான Harry Potter and the Order of the Phoenix படம் பெரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. முதலாம் பாகத்திலிருந்து இத்திரைப்படங்களை விநியோகிக்கும் உரிமையை பிரபல வோர்னர் பிரதர்ஸ் கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. ஏனைய இரண்டு பாகங்களும் 2007, 2008ம் ஆண்டுகளில் திரைப்படமாக வெளிவரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.



ஹறி பொட்டர் படத்தில் அப்பாத்திரத்தில் தோன்றி நடித்த டேனியல் ரெட்கிளிப்பும் பிரபலம் பெற்றார். ஏழாம் பாகமாக இறுதிப் பாகத்தில் நூலாசிரியரை ஹறி பொட்டரை சாகடிக்கும் விதத்தில் கதையை உருவாக்க இருப்பதால் இப்பொழுதே உலகெங்கிலும் உள்ள ஹறிபொட்டர் இரசிகர்கள் அப்படிச் செய்ய வேண்டாம் என குரல் எழுப்பி வருகின்றனர் என அறிய முடிகின்றது.

# இலங்கையில் உள்ள மலைகளின் உயரங்கள்

| மலை | உயரம் (மீற்றர்) |
|---|---|
| பேதுருதலாகல மலை | 2524 |
| கிரிகாலபொத்த மலை | 2395 |
| தொட்டபொல மலை | 2357 |
| குடஹகல மலை | 2320 |
| சிவனொளிபாத மலை | 2243 |
| கிறேட் வெஸ்டன் மலை | 2216 |
| ஹக்கல | 2170 |
| கொனிகல் ஹில் | 2166 |
| வன திரி ஹில் | 2100 |
| மஹ குடாகல | 2100 |
| வோட்டர் போல் பொயின்ட் | 2074 |
| நமுனகல | 2036 |
| கொன் மொல்லிய மலை | 2034 |

(மூலம்: நில அளவை திணைக்களத்தால் வெளியிடப்பட்ட நஷனல் அட்லஸ் தேசப்படம்)

## உலகக் கிண்ணம்

உலகக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டியில் இம்முறை இத்தாலி வெற்றியீட்டி விட்டது. அதற்கான வெற்றிக்கிண்ணமும் வழங்கப்பட்டு விட்டது. ஆனால், இந்தக் கிண்ணம் நிரந்தரமாகவே வெற்றி அணிக்குச் சொந்தமாகப் போவதில்லை. அதாவது இந்த ஒரே கிண்ணமே ஒவ்வொரு முறையும் வெற்றி பெறும் அணிக்கு கைமாறி வருவது மரபாகவே இருந்து வருகின்றது.

36 செ.மீ. உயரம் கொண்ட 18 கரட் தங்கத்தால் செய்யப்பட்ட இந்த .ஃபீபா கிண்ணத்தின் எடை 6175 கிராம்களாகும். 2038ம் ஆண்டு வரை இந்தக் கிண்ணத்தில் வெற்றி அணியின் பெயர்களைக் குறிப்பதற்கு இன்னும் இடம் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான உயர் தூதுவராலயம் UNHCR

சர்வதேச ரீதியிலான அகதிகளின் பாதுகாப்பு ஒழுங்கு, அவர்களின் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை நோக்கமாகக் கொண்டு ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் தொடர்பான உயர் தூதுவராலயம் நிறுவப்பட்டுள்ளது. இது ஐக்கிய நாடுகள் சபையின் இணை ஸ்தாபனமாகும்.

1948ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் பொதுக் கூட்டத்தின் போது அமைக்கப்பட்ட சர்வதேச அகதிகளின் தாபனத்திற்குப் பதிலாகப் புதிதாக தாபனம் ஒன்றை அமைக்க வேண்டும் என 1950ம் ஆண்டு கூட்டப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையின் பொதுக் கூட்டத்தின் போது கலந்தாலோசிக்கப்பட்டது. இதற்கமைய 1951ம் ஆண்டு ஜனவரி மாதம் 1ம் திகதி ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையால் 'அகதிகள் தொடர்பான உயர் தூதுவராலயம்' நிறுவப்பட்டது, இரண்டாம் உலக யுத்தத்தின் போது அகதிகளாக்கப்பட்டவர்களுக்கு அரசியல் மற்றும் சட்ட ரீதியான பாதுகாப்பை வழங்குவதையே ஆரம்பத்தில் ஆரம்பிக்கப்பட்ட அகதிகளுக்கான நிறுவனம் நோக்கமாகக் கொண்டிருந்தது. இரண்டாம் உலக யுத்தத்தின் போது பல இடங்களுக்குப் பரவிச் சென்ற அகதிகளில் அநேகர் ஐரோப்பிய இனத்தவர்களாவர். இவர்கள் அனைவருக்கும் நிவாரணம் வழங்கிய இந்நிறுவனம் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் உயர் தூதுவராலயம் என்ற பெயரில் ஸ்தாபிக்கப்பட்டது. இதன் தலைமையகம் சுவிட்சர்லாந்திலுள்ள ஜெனீவா நகரில் அமைந்துள்ளது.

இந்த அமைப்பில் 120 நாடுகள் அங்கத்துவம் பெற்றுள்ளன. இதன் நோக்கங்களை பின்வருமாறு குறிப்பிடலாம்:

சர்வதேச ரீதியில் அகதிகளுக்குப் பாதுகாப்பை வழங்கல், மற்றும் அவர்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வைக் கண்டுபிடித்தல், யுத்தம் மற்றும் இடர்களின் காரணமாகத் தம் சொந்த இடங்களை கைவிட்டுச் சென்ற மக்களுக்குத் தம் வாழ்க்கையைக் கொண்டு நடத்தத் தேவைப்



படும் உதவிகளை வழங்கல் என்பனவாகும். பொதுவாக அரசாங்கம் மற்றும் தொண்டர் தாபனங்களே அகதிகளுக்கு முதலுதவிகளை வழங்கி வந்தன. சில சந்தர்ப்பங்களில் தனியார் மூலமும் முதலுதவிகளை வழங்கப்பட்டு வருகின்றன. முதலுதவிகளை 2% மானவை ஐக்கிய நாடுகள் சபையின் வரவு செலவுத் திட்டத்தால் வழங்கப்படுகின்றன.

இந்த அமையத்தின் செயற்பாடுகளாவன:

அகதிகளின் சட்ட ரீதியான உரிமைகள் உறுதிப்படுத்தல், அகதிகள் மீளவும் தம் சொந்த இருப்பிடங்களுக்கு அல்லது புதிய பிரதேசங்களில் குடியேறும்வரை அவர்களுக்கு அரசியல் ரீதியான பாதுகாப்பை வழங்கல், பலாத்காரமாக வெளியேற்றப்பட்டோருக்கு நீதிமன்ற உதவிகளைப் பெறல், தொழில் பெற்றுக் கொள்வதற்கான உரிமை, அகதிகள் கல்வி கற்பதற்கான உரிமை போன்றவை தொடர்பாக ஒவ்வொரு நாட்டு அரசுடனும் நடுநிலையான பேச்சுவார்த்தைகளில் ஈடுபடல், சமூக மற்றும் பொருளாதார உதவிகளை வழங்கல், வீடமைப்புத் திட்டங்களை ஆரம்பித்தல்.

இந்நிறுவனம் பிரதானமாக மேற்கொண்ட சில பணிகளைப் பெற்ற முக்கிய பிரதேசங்களாவன:

போல்கன் தீவு - சுமார் 8 மில்லியன் மக்களை திரும்பவும் குடியேற வைத்தல். ஆனால், இன்னும் 3 மில்லியன் மக்களை யூகோஸ்லாவியா மற்றும் குரைசியா நாடுகளில் அகதிகளாய் உள்ளனர்.

கொலம்பியா - சுமார் 2 மில்லியன் மக்கள் திரும்பவும் குடியேறியுள்ளனர். பாலஸ்தீனம் - சுமார் 3.8 மில்லியன் மக்கள் ஐக்கிய நாடுகள் சபையின் உதவி பெறும் முகமாக பதிவு செய்யப்பட்டுள்ளனர். இலங்கை - நாட்டின் வட பகுதியில் ஏற்பட்டுள்ள யுத்தத்தின் காரணமாக இடம்பெயர்ந்த மக்களை திரும்பக் குடியேற்றவும், அவர்களின் உரிமைகளைப் பெறவும் இந்த அமையம் முயற்சி செய்து வருகின்றது. மேற்கு ஆபிரிக்கா - மத்திய ஆபிரிக்கா இந்நாடுகளிலும் இதன் செயற்பாடுகள் இடம் பெறுகின்றன.

இலங்கையினுள் செயற்படுத்தப்படும் செயற்பாடுகளாவன:

இந்தியாவிலிருந்து சொந்த நாடான இலங்கைக்குத் திரும்பி

வரும் அகதிகளுக்கு உதவிகளை வழங்கல், திரும்பவும் குடியேற ஒத்துழைப்பு வழங்குவது பற்றிய விடயங்களுக்காக 1987ம் ஆண்டு இது தொடர்பான சேவையொன்று ஆரம்பிக்கப்பட்டது. வடக்கு, கிழக்கு யுத்தத்தின் காரணமாக அகதியாக்கப்பட்டவர்கள் தமது வாழ்க்கையைக் கொண்டு நடாத்தத் தேவையான உதவிகள் மற்றும் அவர்களின் புனர்நிர்மாணத்திற்குத் தேவையான ஒத்துழைப்பினை வழங்கல்.

இந்நிறுவனத்தின் செயற்பாடுகளுக்காக 1964, 1981ம் ஆண்டுகளுக்கான நோபல் சமாதானப் பரிசு இந்த அமையத்திற்குக் கிடைத்தது. ஒவ்வொரு வருடமும் ஜுன் 30ம் திகதி அகதிகளுக்கான தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

## நோபல் பரிசு பெற்ற இந்தியர்கள்



நோபல் பரிசு பல்வேறு துறைகளில் சிறப்பாக செயல்படுபவர்களை கௌரவித்து வழங்கப்படுகிறது. இந்த நோபல் பரிசை 7 இந்தியர்கள் பெற்றுள்ளனர். அவர்கள் விவரம் வருமாறு:

1913 ஆம் ஆண்டு இலக்கியத்திற்கான நோபல் பரிசை ரவீந்திரநாத் தாகூர் பெற்றார்.

1930 ஆம் ஆண்டு பௌதீகவியலுக்கான நோபல் பரிசை டாக்டர். சி.வி. ராமன் பெற்றார்.

1968 ஆம் ஆண்டு மருத்துவத்திற்கான நோபல் பரிசை டாக்டர் ஹர் கோபிந்சிங் கொரானா பெற்றார்.

1979 ஆம் ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசை அன்னை தெரேசா பெற்றார்.

1983 ஆம் ஆண்டு பௌதீகவியலுக்கான நோபல் பரிசை டாக்டர் எஸ். சந்திரசேகர் பெற்றார்.

998 ஆம் ஆண்டு பொருளாதாரத்திற்கான நோபல் பரிசைஅமர்தியா சென் பெற்றார்.

2001 ஆம் ஆண்டு இலக்கியத்திற்கான நோபல் பரிசை டாக்டர் வி.எஸ். நைப்பால் பெற்றார். இவர் இந்திய வம்சாவளியை சேர்ந்த பிரிட்டன் நாட்டவர்.



## 18வது பொதுநலவாய நாடுகளின் விளையாட்டுப்போட்டி



2006 மார்ச் மாதத்தில் பொதுநலவாய நாடுகளின் 18வது விளையாட்டுப் போட்டிகள் அவுஸ திரேலியாவின் மெல்போன் நகரில் நடைபெற்றது. 11 நாட்கள் நடைபெற்ற இப்போட்டியில் மொத்தம் 4500 வீர, வீராங்கனைகள் கலந்து கொண்டமை சிறப்பம்சமாகும்.

18வது பொதுநலவாய போட்டிகளில் 84 தங்கம், 69 வெள்ளி, 69 வெண்கலங்களுடன் மொத்தமாக 221 பதக்கங்களைப் பெற்று அவுஸ்திரேலியா முதலிடத்தைப் பெற்றது. இங்கிலாந்து 30 தங்கம், 40 வெள்ளி, 34 வெண்கலங்களுடன் இரண்டாம் இடத்தைப் பிடித்தது. 26 தங்கங்களுடன் கனடா மூன்றாமிடத்தைப் பிடித்தது.

2006 பொதுநலவாய போட்டிகளின் சிறந்த வீரருக்கான கௌரவ டேவிட் டிக்சன் விருது குறிபார்த்து சுடும் போட்டியில் ஐந்து தங்கங்கள் வென்ற இந்திய வீரர் சமரேஷ் ஜங்கிற்கு கிடைத்தது. சமரேஷ் ஐந்து தங்கம், ஒரு வெள்ளி, ஒரு வெண்கலம் உட்பட ஆறு பதக்கங்களை வென்றதோடு மூன்று புதிய விளையாட்டுச் சாதனைகளையும் ஏற்படுத்தினார்.

டேவிட் டிக்சன் விருது பொதுநலவாய போட்டிகளில் சிறந்து விளங்கும் வீர வீராங்கனைக்கு வழங்கப்படும் கௌரவ விருதாகும். பொதுநலவாய போட்டி சம்மேளனத்தின் முன்னாள் செயலாளர் டேவிட் டிக்சனின் பெயரில் இது வழங்கப்படுகின்றது. 2010ம் ஆண்டில் 19வது பொதுநலவாய நாடுகளின் விளையாட்டுப் போட்டிகள் இந்தியாவில் புதுடில்லி நகரில் நடைபெறும்.

அவுஸ்திரேலியாவில் நடை பெற்ற 18வது பொதுநலவாய

போட்டியில் இலங்கை சார்பாக 'சிந்தன விதானகே' தங்கப் பதக்கத்தை பெற்றுக் கொண்டார்.

62 கிலோகிராம் எடைக்கான பாரம் தூக்குதல் பிரிவில் வெற்றி பெற்ற இவர் தங்கப் பதக்கத்தை தட்டிக் கொண்டார். இவர் இதன்போது 153 கிலோகிராம் பாரத்தை தூக்கினார். இதில் இரண்டாம் இடத்தை இந்தியாவின் முருகேசன் அருள் பெற்று வெள்ளிப் பதக்கத்தை கைப் பற்றிக் கொண்டார். இவர் 150 கிலோகிராம் பாரத்தை தூக்கினார். இந்தப் போட்டியில் வெண்கலப் பதக்கத்தை மலேசியாவின் ருஸ்வதி பின் அப்துல் ரஷீத் பெற்றுக் கொண்டார்.

இருபத்தைந்து வயதான சிந்தன விதானகே கடந்த முறை மென் செஸ்டர் யுனைட்டட்டில் நடைபெற்ற பொதுநலவாய விளையாட்டுப் போட்டியில் நான்காவது இடத்தைப் பிடித்துக் கொண்டார். அத்தோடு அண்மையில் நடைபெற்ற சான்தியா விளையாட்டுப் போட்டியில் தங்கப் பதக்கத்தை வென்றார்.18வது பொதுநலவாய விளையாட்டுப் போட்டியில் ஒரே தங்கத்தைப் பெற்றவர் சிந்தன விதானகே மாத்திரமே என்பதும் குறிப்பிடத்தக்கது.

## உலக வங்கியைப் பற்றித் தெரிந்து கொள்வோம்!

உலக வங்கி 1944 ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதாகும். தற்போது 177 நாடுகள் இதில் அங்கம் வகிக்கின்றன. வறிய நாடுகளில் வறுமையை ஒழிப்பதற்காக நீண்ட கால அடிப்படைகளில் கடன் வசதிகளை வழங்குவதே இதன் பிரதான குறிக்கோளாகும். அத்தோடு பொருளாதார சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்குரிய ஆலோசனைகளை, உதவிகளை வழங்குவதும் இதன் மற்றுமோர் செயற்றிட்டமாகும்.

அநேகமானோர் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் ஆகிய இரண்டையும் ஒன்றென எண்ணுகின்றனர். உண்மையில் இவை இரண்டும் இரு வேறு நிறுவனங்களாகும். நிதி வசதிகள் உரிய வகையில் பகிர்ந்தளிக்கப்படுகின்றதா? என்பதைக் கண்காணித்து, தேவைப்படின் குறுகிய கால அடிப்படையில் கடனுதவிகளை வழங்குவதே சர்வதேச



நாணய நிதியத்தின் செயற்பாடாகும்.

உலக வங்கியில் உறுப்புரிமை பெற விரும்பும் நாடுகள் முதலில் சர்வதேச நாணய நிதியத்தில் உறுப்புரிமையைப் பெற்றிருத்தல் அவசிய மாகும். மேற்படி, நிறுவனங்கள் இரண்டுமே அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளிலேயே தமது கூடிய கவனத்தைச் செலுத்துகின்றன. இந்த நாடுகளில் பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்துவதற்குரிய பல்வேறுபட்ட ஆலோசனைகளை வழங்குவதும் உலக வங்கியின் பணிகளில் ஒன்றாகும்.

உறுப்புரிமை நாடுகள் உள்ளடங்கலாக நிர்வாகக் குழுவொன்று உலக வங்கியில் செயற்படுவதோடு இந்நாடுகள் மேற்படி வங்கியில் பங்குதாரர்களாகவும் இருப்பர்.

அமெரிக்கா தான் உலக வங்கியில் அதிக பங்குகளைக் கொண்ட நாடாகும். அதாவது உலக வங்கியில் 16.41% பங்கு அமெரிக் காவிற்கு உள்ளது. ஜப்பானுக்கு 7.87% , ஜெர்மனிக்கு 4.49%, பிரிட்ட னுக்கு 4.31%, பிரான்ஸுக்கு 4.31% பங்குகளும் உள்ளன. இந் நாடுகளே உலக வங்கியின் பிரதான பங்குதாரர்களாகும். இதில் ஏனைய நாடுக ளும் அவரவர்களின் பொருளாதார வளர்ச்சி வீதத்திற்கேற்ப பங்குகளைக் கொண்டிருக்கும்.

உலக நாடுகளின் நிதி அமைச்சர்கள் அல்லது அபிவிருத்தித் துறை அமைச்சர்கள் இதன் நிர்வாகக் குழுவில் செயற்படுவதோடு, வருடத்திற்கு ஒரு தடவை இவர்கள் தமக்கிடையே சந்திப்புக்களையும் நடத்துவர்.

மேலும், அன்றாட விடயங்களில் தீர்மானங்களை எடுக்கும் அதிகாரம் நிறைவேற்றுப் பணிப்பாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. வங்கியின் ஊழியர்களே இப்பதவிகளை வகிப்பர்.

இதில் பிரதான நிறைவேற்றுப் பணிப்பாளரை நியமிக்கும் அதிகாரத்தை முக்கிய 5 நாடுகள் கொண்டுள்ளதோடு, மேலும் 19 நிறைவேற்று அதிகாரிகளை நியமிக்கும் அதிகாரம் ஏனைய நாடுகளுக்கும் உள்ளன.

வங்கியின் பிரதான பங்குரிமையைக் கொண்டுள்ள அமெரிக்கா வின் உறுப்பினரே உலக வங்கியின் தலைவராக நியமிக்கப்படுவார். இதன்படி, உலக வங்கியின் தற்போதைய தலைவராக இருப்பவர் 1995ம் ஆண்டில் நியமனம் பெற்ற ஜேம்ஸ் டீ.வொல்ஃ. பென் சொன் என்பவராகும்.

## கொழும்புத் திட்டம்

கொழும்புத் திட்டமானது தெற்காசிய, தென் கிழக்காசிய நாடுக ளின் பொருளாதார முன்னேற்றத்துக்கான ஒத்துழைப்புத் திட்டம் என அறிமுகப்படுத்தப்படுகின்றது. இத்திட்டம் 1951ம் ஆண்டில் இருந்து நடைமுறைப்படுத்தப்படுகின்றது. 1950ம் ஆண்டில் ஜனவரி மாதத்தில் கொழும்பில் நடைபெற்ற பொதுநலவாய வெளிவிவகார அமைச்சர்கள் மகாநாட்டில் இத்திட்டமும் முன்மொழியப்பட்டது. இம் மகாநாட்டினை இலங்கையின் சார்பில் கௌரவ நீதியமைச்சராக இருந்த ஜே.ஆர்.ஜெயவர்தனாவும், அவுஸ்திரேலியப் பிரதிநிதி சேர் பேர்சி ஸ்பென்சர் அவர்களும் தலைமை தாங்கி வழிநடத்தினர். இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட போது ஏழு நாடுகள் மட்டும் பங்கேற்றன. பின்னர் இவ்வமைப்பில் 27 நாடுகள் பங்கேற்றன.

| கொழும்புத் திட்டத்தில் இடம்பெறும் நாடுகள் வருமாறு: | | |
|---|---|---|
| இலங்கை | நேபாளம் | பெரிய பிரித்தானியா |
| தாய்லாந்து | நியூசிலாந்து | பூட்டான் |
| லாவோஸ் | பங்களாதேஷ் | மியன்மார் |
| கொரியா | பிலிப்பைன்ஸ் | ஆப்கானிஸ்தான் |
| சிங்கப்பூர் | இந்தியா | ஈரான் |
| கம்பூச்சியா | பப்புவா நியூகினி | வியட்நாம் |
| அவுஸ்திரேலியா | இந்தோனேசியா | கனடா |
| மலேசியா | பாக்கிஸ்தான் | மாலைதீவு |
| ஐக்கிய அமெரிக்க நாடுகள் | பிஜித் தீவுகள் | |

இவ்வமைப்பினது முக்கிய நோக்கம் அங்கத்துவ நாடுகளின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு தேவையான மூலதன உதவியை வழங்கு



குவதாகும். இவ்வுதவிகள் உறுப்பு நாடுகளில் இருந்து பெற்றுக் கொள்ளப் படுகின்றது. விவசாயம், செய்திப் பரிமாற்றம், சக்தி, கல்வி, சுகாதாரம் போன்ற சமூகப் பொருளாதார அபிவிருத்திக்கு உதவிகள் வழங்கப்படுகின்றன. இவற்றுக்குத் தேவையான நிபுணத்துவ சேவைகளைப் பெற்றுக் கொடுத்தல், பயிற்சி பெறுவதற்கான புலமைப் பரிசில்களை வழங்குதல், ஆய்வுக்குத் தேவையான உபகரணங்களை வழங்குதல் ஆகியன மேற்கொள்ளப்படுகின்றன.

இலங்கையில் பொருளாதார சமூக அபிவிருத்திக்காக இயந்திரங் கள், புகையிரத இயந்திரங்கள், விவசாய உபகரணங்கள், மீன் பிடி வள்ளங்கள், கல்விசார் நடவடிக்கைகளுக்கான உபகரணங்களுடன், தொழில்நுட்பவியலாளர்களுக்குரிய விசேட பயிற்சிகளும், மாணவர்களுக் கான புலமைப்பரிசில்களும் வழங்கப்படுகின்றன. உறுப்பு நாடுகளில் போதை வஸ்துகளுக்கு எதிராக செயற்றிட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த லும், அதனை நிர்வகித்தலும், அதனுடன் தொடர்புடைய அம்சங்களில் பயிற்சி வழங்கலும், தனியார் முயற்சிகளுக்கு உதவி அளித்தலும், தெற்கு நாடுகளான அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் தொழில்நுட்ப செயற்றிட்டங்களுக்கு உதவி அளித்தலும் கொழும்புத் திட்டத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது.

## பொதுநலவாய அமைப்பு

சூரியன் அஸ்தமிக்காத பரந்த குடியேற்றங்களைப் பிரித்தானியா கொண்டிருந்ததை நீங்கள் அறிவீர்கள். இரண்டாம் உலக யுத்தம் வரை உலகில் எல்லாக் கண்டங்களிலும் பாரிய குடியேற்றங்களைக் கொண்டிருந்தது என்பது இதன் கருத்தாகும்.

இரண்டாம் உலக யுத்தத்தின் பின் குடியேற்ற நாடுகளில் சுதந்தி ரம் பற்றிய கோரிக்கைகள் எழுந்தன. இதனால் பேரரசுக் கொள்கையா னது நலிவுறத் தொடங்கியது. ஆசியாவிலும், ஆபிரிக்காவிலும் பல நாடுகள் சுதந்திரத்தை பிரித்தானியாவிடம் இருந்து பெற்றுக் கொண்டன. இத்தகைய சுதந்திரம் பெற்ற நாடுகளுக்கிடையில் கூட்டுறவை வலுப்படுத்த பிரித்தானிய பொதுநலவாயம் என்ற பொது அமைப்பு உருவாக்கப்பட்டது. காலம் செல்ல பிரித்தானிய பொதுநலவாயத்தில் ஆசிய, ஆபிரிக்க நாடுகளின் தொகை அதிகரித்ததினால் இவ்வமைப்பு பொது நலவாயம்

எனப் பெயர் மாற்றப்பட்டது. பொதுநலவாய அமைப்பின் குறிக்கோள்களை பின்வருமாறு குறிப்பிடலாம்.

- ◆ அங்கத்துவ நாடுகளுக்கிடையில் அரசியல், பொருளாதார, கலா சார துறைகளில் பரஸ்பர நல்லுறவை விருத்தி செய்து கொள்ளல்.
- ◆ தொழில்நுட்பங்களைப் பரிமாறிக் கொள்ளல்.
- ◆ புலமைப்பரிசில்களை வழங்கி, அறிவுப்பரிமாற்றத்தை ஏற்படுத்தல்.
- ◆ அங்கத்துவ நாடுகளுக்கிடையில் வர்த்தக தொடர்புகளை பேணுதல்.

பொதுநலவாய நாடுகளுக்கிடையிலான தொடர்புகள் பல்வேறு வழிகளில் இடம் பெறுகின்றன. வர்த்தகம், நிதி, முதலீடுகள், சனத்தொகை இடப்பெயர்வுகள், நீதித்துறை, பொதுக்கல்வி, விளையாட்டு கள் என்பவற்றால் அங்கத்துவ நாடுகளுக்கிடையில் தொடர்புகள் ஏற்படுகின்றன.

## 11வது உலகக் கிண்ண ஹொக்கிப் போட்டி

11வது உலகக் கிண்ண ஹொக்கிப் போட்டி ஜெர்மனியின் மொன்சென் கிளொட்பாக் நகரில் 2006ம் ஆண்டு செப்டம்பரில் நடை பெற்றது. இந்த இறுதிப் போட்டியில் ஜெர்மனி அணி அவுஸ்திரேலியா அணியை 4 - 3 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.இதனைத் தொடர்ந்து உலக ஹொக்கித் தர வரிசை பின்வருமாறு அமைந்தது.

| அணி | இடம் |
|---|---|
| ஜெர்மனி | 1 |
| அவுஸ்திரேலியா | 2 |
| ஸ்பெயின் | 3 |
| கொரியா | 4 |
| இங்கிலாந்து | 5 |
| பாக்கிஸ்தான் | 6 |
| நெதர்லாந்து | 7 |
| நியூசிலாந்து | 8 |
| ஜப்பான் | 9 |
| அர்ஜென்டினா | 10 |
| இந்தியா | 11 |
| தென் ஆபிரிக்கா | 12 |



## ஐக்கிய நாடுகள் சபையில் அங்கத்துவம் பெறும் நாடுகள்

| | நாடு | (ஐ. நா. உறுப்புரிமை நாள்) | மக்கள் தொகை | பரப்பு (சது. கிமீ.) |
|---|---|---|---|---|
| 1 | அங்கோலா (Angola) | 1976/12/01 | 12,479,000 | 1,247,000 |
| 2 | அண்டொரா (Andorra) | 1993/07/28 | 75,000 | 450 |
| 3 | அமெரிக்க ஐக்கிய மாநிலங்கள் (United States of America) | 1945/10/24 | 276,218,000 | 9,364,000 |
| 4 | அயர்லாந்து (Ireland) | 1955/12/14 | 3,705,000 | 70,000 |
| 5 | அர்ஜென்ரினா (Argentina) | 1945/10/24 | 36,557,000 | 2,767,000 |
| 6 | அல்பேனியா (Albania) | 1955/12/14 | 3,113,000 | 29,000 |
| 7 | அல்ஜீரியா (Algeria) | 1962/10/08 | 30,774,000 | 2,382,000 |
| 8 | அன்ரிகுவா -பார்புடா (Antigua and Barbuda) | 1981/11/11 | 67,000 | 440 |
| 9 | அஸெர்பைஜன்(Azerbaijan) | 1992/03/09 | 7,697,000 | 87,000 |
| 10 | ஆப்கானிஸ்தான்(Afganistan) | 1946/11/19 | 21,923,000 | 652,090 |
| 11 | ஆர்மினியா (Armenia) | 1992/03/02 | 3,525,000 | 30,000 |
| 12 | ஆஸ்திரியா (Austria) | 1955/12/14 | 8,177,000 | 84,000 |
| 13 | ஆஸ்திரேலியா (Australia) | 1945/11/01 | 18,705,000 | 7,713,000 |
| 14 | இத்தாலி (Italy) | 1955/12/14 | 57,343,000 | 301,000 |
| 15 | இந்தியா (India) | 1945/10/30 | 1,000,056,000 | 3,288,000 |
| 16 | இந்தோனீசியா (Indonesia) | 1950/09/28 | 209,255,000 | 1,905,000 |
| 17 | இலங்கை (Sri Lanka) | 1955/12/14 | 18,639,000 | 66,000 |
| 18 | இஸ்ரேல் (Israel) | 1949/05/11 | 6,101,000 | 21,000 |
| 19 | ஈகுவடோர் (Ecuador) | 1945/12/21 | 12,411,000 | 284,000 |
| 20 | ஈகுவரோறியல் கினீயா (Equatorial Guinea) | 1968/11/12 | 442,000 | 28,050 |
| 21 | ஈராக் (Iraq) | 1945/12/21 | 22,450,000 | 438,320 |
| 22 | ஈரான் (Iran) | 1945/10/24 | 66,796,000 | 1,648,000 |
| 23 | உக்ரெயின் (Ukraine) | 1945/10/24 | 50,658,000 | 604,000 |
| 24 | உகண்டா (Uganda) | 1962/10/25 | 21,143,000 | 236,000 |
| 25 | உருகுவே (Uruguay) | 1945/12/18 | 3,313,000 | 177,000 |
| 26 | உஸ்பெகிஸ்தான் (Uzbekistan) | 1992/03/02 | 23,942,000 | 447,000 |
| 27 | எகிப்து (Egypt) | 1945/10/24 | 67,226,000 | 1,001,000 |
| 28 | எதியோப்பியா (Ethiopia) | 1945/11/13 | 61,095,000 | 1,097,000 |
| 29 | எமிரேட்ஸ், ஐக்கிய அரபு (United Arab Emirates) | 1971/12/09 | 2,398,000 | 84,000 |
| 30 | எரித்திரியா (Eritrea) | 1993/05/28 | 3,719,000 | 124,800 |
| 31 | எல்சால்வடோர் (El Salvador) | 1945/10/24 | 6,154,000 | 21,000 |
| 32 | எஸ்ரோனியா (Estonia) | 1991/09/17 | 1,412,000 | 45,000 |

| | நாடு | (ஐ. நா. உறுப்புரிமை நாள்) | மக்கள் தொகை | பரப்பு (சது. கிமீ.) |
|---|---|---|---|---|
| 33 | ஐவரி கோஸ்ற் (Cote' d' Ivoire) | 1960/09/20 | 14,526,000 | 322,000 |
| 34 | ஐஸ்லாந்து (Iceland) | 1946/11/19 | 279,000 | 3,000 |
| 35 | ஓமான் (Oman) | 1971/10/07 | 2,460,000 | 212,000 |
| 36 | கபோன் (Gabon) | 1960/09/20 | 1,197,000 | 268,000 |
| 37 | கம்பூசியா (Cambodia) | 1955/12/14 | 10,945,000 | 181,000 |
| 38 | கமரூன் (Cameroon) | 1960/09/20 | 14,693,000 | 475,000 |
| 39 | கயானா (Guyana) | 1966/09/20 | 855,000 | 214,970 |
| 40 | கனடா (Canada) | 1945/11/09 | 30,857,000 | 9,976,000 |
| 41 | கஸாக்ஸ்தான் (Kazakhstan) | 1992/03/02 | 16,269,000 | 2,717,000 |
| 42 | காட்டார் (Qatar) | 1971/09/21 | 589,000 | 11,000 |
| 43 | காம்பியா (Gambia) | 1965/09/21 | 1,268,000 | 11,000 |
| 44 | கானா (Ghana) | 1957/03/08 | 19,678,000 | 239,000 |
| 45 | கியூபா (Cuba) | 1945/10/24 | 11,160,000 | 110,860 |
| 46 | கிர்கிஸ்தான் (Kyrgyzstan) | 1992/03/02 | 4,669,000 | 199,000 |
| 47 | கிரிபாத்தி (Kiribati) | 1999/09/14 | 82,000 | 730 |
| 48 | கிரேக்கம் (Greece) | 1945/10/25 | 10,626,000 | 132,000 |
| 49 | கிறெனடா (Grenada) | 1974/09/17 | 93,000 | 340 |
| 50 | கினியா (Guinea) | 1958/12/12 | 7,360,000 | 246,000 |
| 51 | கினியா பிஸ்ஸாவ் (Guinea-Bissau) | 1974/09/17 | 1,187,000 | 36,000 |
| 52 | குரோசியா (Croatia) | 1992/03/22 | 4,477,000 | 57,000 |
| 53 | குவாதமாலா (Guatemala) | 1945/11/21 | 11,090,000 | 109,000 |
| 54 | குவைத் (Kuwait) | 1963/05/14 | 1,897,000 | 18,000 |
| 55 | கென்யா (Kenya) | 1963/12/16 | 29,549,000 | 580,000 |
| 56 | கேப் வெர்டே (Cape Verde) | 1975/09/16 | 418,000 | 4,030 |
| 57 | கொங்கோ (Congo) | 1960/09/20 | 2,864,000 | 342,000 |
| 58 | கொங்கோ (சயர்) (Congo - (Zaire)) | 1960/09/20 | 50,335,000 | 2,345,000 |
| 59 | கொமொறொஸ் (Comoros) | 1975/11/12 | 676,000 | 2,230 |
| 60 | கொரியா,தென் (South Korea) | 1991/09/17 | 46,480,000 | 99,000 |
| 61 | கொரியா, வட (North Korea) | 1991/09/17 | 23,702,000 | 120,540 |
| 62 | கொலம்பியா (Colombia) | 1945/11/05 | 41,564,000 | 1,139,000 |
| 63 | கோஸ்ரா றிக்கா (Costa Rica) | 1945/11/02 | 3,933,000 | 51,000 |
| 64 | சமோவா (Samoa) | 1976/12/15 | 177,000 | 2,840 |
| 65 | சவூதி அரேபியா (Saudi Arabia) | 1945/10/24 | 20,899,000 | 2,150,000 |




| | நாடு | (ஐநா உறுப்புரிமை நாள்) | மக்கள் தொகை | பரப்பு (சது. கிமீ.) |
|---|---|---|---|---|
| 66 | சாஓதோமே பிரின்சிப்பே (Sao Tome and Principe) | 1975/09/16 | 144,000 | 960 |
| 67 | சாட் (Chad) | 1960/09/20 | 7,458,000 | 1,284,000 |
| 68 | சாம்பியா (Zambia) | 1964/12/01 | 8,976,000 | 753,000 |
| 69 | சான் மறினோ (San Marino) | 1992/03/02 | 26,000 | 61 |
| 70 | சிங்கப்பூர் (Singapore) | 1965/09/21 | 3,522,000 | 1,000 |
| 71 | சிம்பாப்வே (Zimbabwe) | 1980/08/20 | 11,529,000 | 391,000 |
| 72 | சியாரா லியோன் (Sierra Leone) | 1961/09/27 | 4,717,000 | 72,000 |
| 73 | சிரியா (Syria) | 1945/10/24 | 15,725,000 | 185,000 |
| 74 | சிலி (Chile) | 1945/10/24 | 15,019,000 | 757,000 |
| 75 | சீசெல்சு (Seychelles) | 1976/09/21 | 77,000 | 450 |
| 76 | சீனா (China) | 1945/10/24 | 1,283,100,000 | 9,561,000 |
| 77 | சுரினாம் (Suriname) | 1975/12/04 | 415,000 | 163,270 |
| 78 | சுலோவாக்கியா (Slovakia) | 1993/01/19 | 5,382,000 | 49,000 |
| 79 | சுலோவேனியா (Slovenia) | 1992/05/22 | 1,989,000 | 20,000 |
| 80 | சுவாசிலாந்து (Swaziland) | 1968/09/24 | 980,000 | 17,360 |
| 81 | சுவிற்சர்லாந்து (Switzerland) | | 7,344,000 | 41,000 |
| 82 | சுவீடன் (Sweden) | 1946/11/19 | 8,892,000 | 450,000 |
| 83 | சூடான் (Sudan) | 1956/11/12 | 28,883,000 | 2,505,810 |
| 84 | செக் (Czech) | 1993/01/19 | 10,262,000 | 79,000 |
| 85 | சென் கிற்ஸ்-நெவிஸ் (Saint Kitts and Nevis) | 1983/09/23 | 39,000 | 360 |
| 86 | சென் லூசியா (Saint Lucia) | 1979/09/18 | 152,000 | 620 |
| 87 | சென் வின்சென்ற்-கிறெனடயின்ஸ் (Saint Vincent and the Grenadines) | 1980/09/16 | 113,000 | 390 |
| 88 | செனகல் (Senagal) | 1960/09/28 | 9,240,000 | 197,000 |
| 89 | சைப்ரஸ் (Cyprus) | 1960/09/20 | 778,000 | 9,250 |
| 90 | சொலமன் தீவுகள் (Solomon Islands) | 1978/09/19 | 430,000 | 28,900 |
| 91 | சோமாலியா (Somalia) | 1960/09/20 | 9,672,000 | 637,660 |
| 92 | டென்மார்க் (Denmark) | 1945/10/24 | 5,282,000 | 43,000 |
| 93 | டொமினிகன் குடியரசு (Dominican Republic) | 1945/10/24 | 8,364,000 | 49,000 |
| 94 | டொமினிகா (Dominica) | 1978/12/18 | 71,000 | 750 |
| 95 | தஜிக்கிஸ்தான் (Tajikistan) | 1992/03/02 | 6,104,000 | 143,100 |
| 96 | தாய்லாந்து (Thailand) | 1946/12/16 | 60,856,000 | 513,000 |

| | நாடு | | (ஐநா உறுப்புரிமை நாள்) | மக்கள் தொகை | பரப்பு (சது. கிமீ.) |
|---|---|---|---|---|---|
| 97 | தான்சானியா | (Tanzania) | 1961/12/14 | 32,793,000 | 945,000 |
| 98 | துர்க்மெனிஸ்தான் | (Turkmenistan) | 1992/03/02 | 4,384,000 | 488,100 |
| 99 | துருக்கி | (Turkey) | 1945/10/24 | 65,546,000 | 779,000 |
| 100 | துவாலு | (Tuvalu) | | 11,000 | 20 |
| 101 | துனீசியா | (Tunisia) | 1956/11/12 | 9,460,000 | 164,000 |
| 102 | தென் ஆபிரிக்கா | (South Africa) | 1945/11/07 | 39,900,000 | 1,221,000 |
| 103 | தைவான் | (Taiwan) | | 20,300,000 | 36,000 |
| 104 | நடு ஆபிரிக்க அரசு | (Central African Republic) | 1960/09/20 | 3,550,000 | 623,000 |
| 105 | நமீபியா | (Namibia) | 1990/04/23 | 1,695,000 | 824,000 |
| 106 | நவுறு | (Nauru) | 1999/09/14 | 11,000 | 20 |
| 107 | நிகாரகுவா | (Nicaragua) | 1945/10/24 | 4,938,000 | 130,000 |
| 108 | நியுசிலாந்து | (New Zealand) | 1945/10/24 | 3,828,000 | 271,000 |
| 109 | நெதர்லாந்து | (Netherlands) | 1945/12/10 | 15,735,000 | 37,000 |
| 110 | நேபாளம் | (Nepal) | 1955/12/14 | 23,385,000 | 141,000 |
| 111 | நைஜர் | (Niger) | 1960/09/20 | 10,400,000 | 1,267,000 |
| 112 | நைஜீரியா | (Nigeria) | 1960/10/07 | 108,945,000 | 924,000 |
| 113 | நோர்வே | (Norway) | 1945/11/27 | 4,442,000 | 324,000 |
| 114 | பராகுவே | (Paraguay) | 1945/10/24 | 5,358,000 | 407,000 |
| 115 | பல்கேரியா | (Bulgaria) | 1955/12/14 | 8,279,000 | 111,000 |
| 116 | பனாமா | (Panama) | 1945/11/13 | 2,812,000 | 76,000 |
| 117 | பஹ்ரெயின் | (Bahrain) | 1971/09/21 | 606,000 | 680 |
| 118 | பஹாமாஸ் | (Bahamas) | 1973/09/18 | 301,000 | 13,880 |
| 119 | பாகிஸ்தான் | (Pakistan) | 1947/09/30 | 152,331,000 | 796,000 |
| 120 | பாபுவா-நியுகினியா | (Papua-New Guinea) | 1975/10/10 | 4,702,000 | 463,000 |
| 121 | பார்படாஸ் | (Barbados) | 1966/12/09 | 269,000 | 430 |
| 122 | பாலஸ்தீனம் | (Palestine) | | 1,136,000 | 6,100 |
| 123 | பிரான்ஸ் | (France) | 1945/10/24 | 58,886,000 | 552,000 |
| 124 | பிரிட்டன் | (United Kingdom) | 1945/10/24 | 58,744,000 | 245,000 |
| 125 | பிரேசில் | (Bzazil) | 1945/10/24 | 167,988,000 | 8,512,000 |
| 126 | பிலிப்பைன்ஸ் | (Philippines) | 1945/10/24 | 74,454,000 | 300,000 |
| 127 | பின்லாந்து | (Finland) | 1955/12/14 | 5,165,000 | 338,000 |
| 128 | பிஜி | (Fiji) | 1970/10/13 | 806,000 | 18,270 |



| | நாடு | | (ஐ. நா. உறுப்புரிமை நாள்) | மக்கள் தொகை | பரப்பு (சது. கிமீ.) |
|---|---|---|---|---|---|
| 129 | புர்கினோ பாசோ | (Burkina Faso) | 1960/09/20 | 11,616,000 | 274,000 |
| 130 | புறுண்டி | (Burundi) | 1962/09/18 | 6,565,000 | 28,000 |
| 131 | புறுணை | (Brunei) | 1984/09/21 | 322,000 | 5,770 |
| 132 | பூடான் | (Bhutan) | 1971/09/21 | 2,064,000 | 47,000 |
| 133 | பெரு | (Peru) | 1945/10/31 | 25,230,000 | 1,285,000 |
| 134 | பெல்ஜியம் | (Belgium) | 1945/12/27 | 10,152,000 | 31,000 |
| 135 | பெலாருஸ் | (Belarus) | 1945/10/24 | 10,274,000 | 208,000 |
| 136 | பெலாவு | (Palau (Belau)) | 1994/12/15 | 19,000 | 497 |
| 137 | பெலிஸ் | (Belize) | 1981/09/25 | 235,000 | 22,960 |
| 138 | பெனின் | (Benin) | 1960/09/20 | 5,937,000 | 113,000 |
| 139 | பொலிவியா | (Bolivia) | 1945/11/14 | 8,142,000 | 1,099,000 |
| 140 | பொற்சுவானா | (Botswana) | 1966/10/17 | 1,597,000 | 582,000 |
| 141 | பொஸ்னியா-ஹெர்சகோவினா | (Bosnia and Herzegovina) | 1992/03/22 | 3,839,000 | 51,130 |
| 142 | போர்த்துக்கல் | (Portugal) | 1955/12/14 | 9,873,000 | 92,000 |
| 143 | போலாந்து | (Poland) | 1945/10/24 | 38,740,000 | 313,000 |
| 144 | மங்கோலியா | (Mongolia) | 1961/10/27 | 2,621,000 | 1,567,000 |
| 145 | மசிடோனியா | (Macedonia) | 1993/04/08 | 2,011,000 | 26,000 |
| 146 | மடகாஸ்கர் | (Madagascar) | 1960/09/20 | 15,497,000 | 587,000 |
| 147 | மலாவி | (Malawi) | 1964/12/01 | 10,640,000 | 118,000 |
| 148 | மலேசியா | (Malaysia) | 1957/09/17 | 21,830,000 | 330,000 |
| 149 | மார்ஷல் தீவுகள் | (Marshall Islands) | 1991/09/17 | 62,000 | 180 |
| 150 | மால்ரா | (Malta) | 1964/12/01 | 386,000 | 320 |
| 151 | மாலி | (Mali) | 1960/09/28 | 10,960,000 | 1,240,000 |
| 152 | மாலை தீவு | (Maldives) | 1965/09/21 | 278,000 | 300 |
| 153 | மியான்மார் | (Myanmar) | 1948/04/19 | 45,059,000 | 676,580 |
| 154 | மெக்சிகோ | (Mexico) | 1945/11/07 | 97,365,000 | 1,958,000 |
| 155 | மைக்குரோனேசியா | (Micronesia) | 1991/09/17 | 116,000 | 700 |
| 156 | மொசாம்பிக் | (Mozambique) | 1975/09/16 | 19,286,000 | 802,000 |
| 157 | மொல்டோவியா | (Moldovia) | 1992/03/02 | 4,380,000 | 34,000 |
| 158 | மொறிசியசு | (Mauritius) | 1968/04/24 | 1,150,000 | 2,000 |
| 159 | மொறித்தானியா | (Mauritania) | 1961/10/07 | 2,598,000 | 1,026,000 |
| 160 | மொறொக்கோ | (Morocco) | 1956/11/12 | 27,867,000 | 447,000 |

| | நாடு | (ஐ. நா. உறுப்புரிமை நாள்) | மக்கள் தொகை | பரப்பு (சது. கிமீ.) |
|---|---|---|---|---|
| 161 | மொனாகோ (Monaco) | 1993/05/28 | 33,000 | 200 |
| 162 | யப்பான் (Japan) | 1956/12/18 | 126,505,000 | 378,000 |
| 163 | யூகோஸ்லாவியா (Yugoslavia) | 1945/10/24 | 10,637,000 | 102,170 |
| 164 | யேமன் (Yemen) | 1947/09/30 | 17,488,000 | 528,000 |
| 165 | ரஷ்யா (Russia) | 1945/10/24 | 147,196,000 | 17,075,000 |
| 166 | ரினிடாட் -ரொபாகோ (Trinidad and Tobago) | 1962/09/18 | 1,289,000 | 5,000 |
| 167 | ரொங்கா (Tonga) | 1999/09/14 | 98,000 | 750 |
| 168 | ரோகோ (Togo) | 1960/09/20 | 4,512,000 | 57,000 |
| 169 | ரோமானியா (Romania) | 1955/12/14 | 22,402,000 | 238,000 |
| 170 | லக்செம்போர்க்(Luxembourg) | 1945/10/24 | 426,000 | 2,590 |
| 171 | லற்வியா (Latvia) | 1991/09/17 | 2,389,000 | 65,000 |
| 172 | லாவோஸ் (Lao) | 1955/12/14 | 5,297,000 | 237,000 |
| 173 | லிதுவானியா (Lithuania) | 1991/09/17 | 3,682,000 | 65,000 |
| 174 | லிபியா (Libya) | 1955/12/14 | 5,471,000 | 1,759,540 |
| 175 | லெசொத்தோ (Lesotho) | 1966/10/17 | 2,108,000 | 30,000 |
| 176 | லெபனன் (Lebanon) | 1945/10/24 | 3,236,000 | 10,000 |
| 177 | லைச்ரென்ஸ்ரெயின் (Liechtenstein) | 1990/09/18 | 32,000 | 160 |
| 178 | லைபீரியா (Liberia) | 1945/11/02 | 2,930,000 | 97,750 |
| 179 | வங்காள தேசம் (Bangladesh) | 1974/09/17 | 126,947,000 | 144,000 |
| 180 | வத்திக்கான் நகர் (Vatican City) | | 480 | 10 |
| 181 | வனுவத்து (Vanuatu) | 1981/09/15 | 186,000 | 12,190 |
| 182 | வியற்னாம் (Viet Nam) | 1977/09/20 | 78,705,000 | 332,000 |
| 183 | வெனிசுலா (Venezuela) | 1945/11/15 | 23,706,000 | 912,000 |
| 184 | றுவாண்டா (Rwanda) | 1962/09/18 | 7,235,000 | 26,000 |
| 185 | ஜமைக்கா (Jamaica) | 1962/09/18 | 2,560,000 | 11,000 |
| 186 | ஜிபுற்றி (Djibouti) | 1977/09/20 | 629,000 | 23,200 |
| 187 | ஜெர்மனி (Germany) | 1973/09/18 | 82,178,000 | 357,000 |
| 188 | ஜோர்டான் (Jordan) | 1955/12/14 | 6,482,000 | 89,000 |
| 189 | ஜோர்ஜியா (Georgia) | 1992/07/31 | 5,006,000 | 70,000 |
| 190 | ஸ்பெயின் (Spain) | 1955/12/14 | 39,634,000 | 505,000 |
| 191 | ஹங்கேரி (Hungary) | 1955/12/14 | 10,076,000 | 93,000 |
| 192 | ஹைதி (Haiti) | 1945/10/24 | 8,087,000 | 28,000 |
| 193 | ஹொண்டுறாஸ் (Honduras) | 1945/12/17 | 6,316,000 | 112,000 |



வரையறுக்கப்பட்ட 'சிந்தனை வட்டம்'
வெளியீட்டாளர்கள் (தனியார்) கம்பனி
இல 14 உடத்தலவின்னை மடிகே,
உடத்தலவின்னை 20802, ஸ்ரீலங்கா
தொலைபேசி 081- 2493746
தொலைநகல் 081- 2497246

ISBN 955-8913-53-7

'சிந்தனை வட்டத்தின் ௨௨௯ வது வெளியீடு'